**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Water Resources as Portrayed in Naladiyar

**K. Monisha,** Ph.D scholar, Department of Tamil, S.T. Hindu college, Nagercoil, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-6768-3876**
**I. Dr R.Sorna Bamila,** AssistantProfessor, Department of Tamil, S.T.Hindu College Nagercoil, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-3677-4644**
**DOI: 10.5281/zenodo.6622582**

## Abstract

*Water is referred to here as one of the vital matter of life because there is no world without it. The world cannot survive for the living species without water. "Many literatures attest to the fact that our ancestors knew the facts of hydrology, one of the text which delineates about it is 'Naladiyar'. This article sets out to cull down the evidences that 'Naladiyar' speaks about the importance of water.*

**Keywords:** *Naladiyar*, Water Resources, Life.

## References

[1] Elangumaran, R. *Pathinenkeelkanaku*. Nanmanikadigai, Student Publishing, Chennai. 2009.
[2] Kaumariswari.S. *Naladiyar*. Sharda Publishing, Chennai 2006.
[3] Pakkiyamari. *Vagaimainokililakiyavaralaru*, New Century Book House (P) Ltd, Chennai, 2013.
[4] Manikavasagan. Gya. *Palamozhinanooru*, Uma Publishing, Chennai, 2013.
[5] Varadharasanar.M. *Thirukkural*. South Indian Saiva Siddhanta Nurupathippuk Kazhagam Ltd., Chennai.1993.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# நாலடியார் நவிலும் நீர் வளங்கள்

**கி.மோனிஷா,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்க்கலைஆய்வகம்,
தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-6768-3876**
**முனைவர் இரா. சொர்ணபமிலா,** உதவிப்பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம்,
தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-3677-4644**
**DOI: 10.5281/zenodo.6622582**

**ஆய்வுச் சுருக்கம்**

*ஐம்பூதங்கள் இன்றி உலகம் இல்லை என்பதற்கினங்க ஐம்பூதங்களின் ஒன்றாகநீர் இங்குக் குறிப்பிடப்படுகிறது. நீரின்றி அமையாது உலகு" என வள்ளுவரும் நீரை சிறப்பிக்கிறார். நீர்மஇயல் உண்மைகளை நமது முன்னோர்கள் அறிந்திருந்தமைக்கு பல இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. அதில் ஒன்று பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான நாலடியார் ஆகும். பல அறக்கருத்துக்கள் பேசும் நாலடியாரில் நீர்க் குறித்த செய்தியும் அறமாகவே கருதப்படுகிறது.*

**திறவுச்சொற்கள்**: நாலடியார், நீர்வளங்கள், நீர்.

**முன்னுரை**

பஞ்சபூதங்கள் (நீர்,நிலம்,காற்று,நெருப்பு, ஆகாயம்) இன்றி உலகம் இல்லை என்பது உலகநியதி அதிலும் 'நீரின்றி அமையாது உலகு' என வள்ளுவர் கூற்றிலிருந்து பஞ்சபூதங்களிலும் நீரின் முக்கியத்துவத்தை அறிய இயலுகிறது. உலகத்தில் உள்ள உயிரினங்கள் அனைத்தும் நீர்நிலைகள் இருக்கும் இடங்களைத் தேடிச்சென்று அதனருகே வாழ்கின்றன. மனிதன் மட்டுமே வாழும் இடங்களில் உள்ள நீரின்வளத்தைக் கண்டறிந்து முறையாகப் பயன்படுத்தி வாழ்க்கையை வளமாக்கிக் கொள்கிறான். நீர்மஇயல் உண்மைகளை நமது முன்னோர்கள் உணர்ந்து இருந்தமைக்கு சங்க இலக்கியங்களும், அற இலக்கியங்களும், சிற்றிலக்கியங்களும் சான்றாக அமைகிறது. 'நிலத்தங்கம்' என அழைக்கப்படும் நீரின்வளத்தை அற இலக்கியத்தில் ஒன்றான நாலடியார் வழி அறியலாம்.

**சங்கம் மருவிய காலம்**

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்ஆகும். இப்பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறளுக்கு அடுத்து நாலடியார் போற்றப்படுகிறது. நான்கடி கொண்ட வெண்பாக்களால் ஆனதால் நாலடியார் என பெயர் பெற்றது 'நாலடிநானூறு' என்ற மற்றொரு பெயரும் இதற்கு உண்டு.

*"ஆலும் வேலும் பல்லுக்குறுதி*
*நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி*
*பழகு தமிழ்ச்சொல் லருமை நாலிரண்டில்"* (*பழமொழி நானூறு*)

என்ற பழமொழிகள் இதன் பெருமையைக் குறிக்கிறது. அறக்கருத்துக்களான நிலையாமை அறம், துறவு ஈகை, கல்வி, பெருமை, அறிவுடைமை, மானம், கற்புடை மகளிர் இவையும், இவற்றுடன் நீர் குறித்த

செய்தியும் பேசப்படுகிறது. அற இலக்கியத்தில் நீரும் அதன் பாதுகாப்பும் அறமாகவே கொள்ளப்படுகிறது.

**நீர் மேலாண்மையின் தொடக்க காலநிலை**

நாகரீகத்தின் தொட்டில் என நதிக்கரை நாகரீகத்தை குறிப்பிடுவர். ஆற்றுப்படுகையில் பயிர்த்தொழில் செய்த மனிதன் ஆற்றுநீரைப் பாசனத்திற்காகப் பயன்படுத்தும் முறையை கற்றுக்கொண்டான். அதுவே நீர் மேலாண்மையின் தொடக்ககாலமாக அமைகிறது.

**புதுமழைப் பொழிவு**

உலகின் உயிரினச் சுழற்சியும், நீர் சுழற்சியும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளன. மழைப்பொழிவே உயிரினங்களையும் உலகையும் வாழ வைக்கிறது. அதனாலேயே மழை உயிர்களுக்குச் சாவா மருந்தாகக் கருதப்படுகிறது.

**"பெயற்பால் மழைபெய்யாக் கண்ணும் உலகம்**
**செயற்பால் செய்யா விடினும்" (நாலடி -97)**

என்ற நாலடிவரிகள் மழையானது பெய்யவேண்டிய காலத்தில் பெய்யாவிட்டால் உயர்ந்தோர் தாம் செய்யவேண்டிய அறங்களை செய்ய இயலாது என்பதைப் போதிக்கிறது. இதையே வள்ளுவரின்

**"தானம் தவரமிரண்டும் தங்கா வியனுலகம்**
**வானம் வழங்கா தெனின்" (திரு 2: 19)**

என்ற குறளும் விளக்குகிறது.

**நீரின் சேர்க்கை**

ஓர் இடத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரானது சமுத்திரத்தைச் சேர்ந்த போது (சாக்கடைஎன்னும்) தன் பெயரானது கடல்நீர் என மாறித் தீர்த்தமாகவே கருதப்படும். மேலும், பாலோடு கலந்த நீர் அந்தப் பாலாகவே ஆகி விடுமேயல்லாது நீராகத் தன்தன்மை வெளியே தெரிந்து காணப்படாததாகும் என்பதை பின்வரும் நாலடிபாடல் உணர்த்துகிறது.

**"பாலோட ளாயநீர் பாலாகும் அல்லது**
**நீராய்நிறம் தெரிந்து தோன்றாதாம்" (நாலடி -177)**

**நீர்த்துறைகள்**

மழை பெய்வதன் மூலமாக பூமியில் கிடைக்கும் இயற்கை நீரானது உயிரினங்களுக்கு பயன்படுவது நீர்வளம் என்பர். கடல், ஆறு, ஏரி மற்றும் ஊற்றுநீர், கிணற்றுநீர் போன்றவற்றைக் குறிக்கும். 'குளம்தொட்டு வளம் பெருக்கி' என்று நீர்வளத்தின் ஆதாரநிலையைச் சுட்டுகிறார் கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

**"அற்றக் கடைத்தும் அகல்யாற கழ்ந்தக்கால்**
**தெற்றெனத் தெண்ணீர் படும்" (நாலடி -150)**

என்ற வரியானது அகண்ட நதியானது வறண்டு போன காலத்திலும், தோண்டினால் உடனடியாகத் தெளிந்த நீரைத்தரும் என்கிறது. நாலடியோ ஊற்றெடுக்கும் நீரையுடைய கிணறானது, மழையில்லா வறட்சிக்காலத்திலும் ஊர் மக்கள் நீரிறைத்து உண்பதற்கு ஈடுகொடுக்கும் எனவும் கூறுகிறது .

**நீர்வாழ்த் தாவரங்கள்**

நீர்நிலைகளில் நீர்வாழ்த் தாவரங்கள் வளர்ந்திருந்த செய்தியும் இங்குக் குறிப்பிடப்படுகிறது.

குவளை மலரானது தெளிந்த நீரில் மலர்ந்திருக்கும் எனவும் ஒரே நீர்ப்பரப்பில் ஒருசேர வளர்ந்தாலும் விரிந்து பரந்து வளரும் குவளைமலரின் தன்மையை அல்லிமலர்கள் ஒத்திருப்பதில்லை என்றாலும், குவளையும் அல்லியும் ஒருசேர வளர்ந்த நிலையை பின்வரும் பாடல் அடி மூலம் அறியலாம்.

**“ஒரு நீர்ப்பிறந் தொருங்கு நீண்டக் கடைத்தும்**
**விரிநீர்க்குவளையை ஆட்பலொக் கல்லா" (நாலடி-236)**

நீருக்குள்ளேயே தோன்றி பச்சைநிற முடையதாயிருந்த போதிலும் நெட்டியானது தன்கைத்தே ஈரப்பசை இல்லாததாகும்.

**வேளாண்மையில் நீரின் பங்கு**

விவசாயத்திற்கு நீரானது இன்றியமையாத ஒன்றாகும். விவசாயிகள் நீரைப் பாதுகாப்பதை இப்பாடல் விளக்குகிறது .

**"செறுத்தோறு டைப்பினும் செம்புனலோ டூடார்**
**மறுத்தும் சிறைசெய்வர் நீர்நசைஇ வாழ்நர்" ( நாலடி -222 )**

நீரை விரும்பி வாழ்கின்ற விவசாயிகள், அந்நீரை அணைக்கட்டி அடைக்கும் போதெல்லாம் அது உடைந்து சென்றுவிட்டாலும் செம்மை பொருந்திய அந்நீருடன் பிணக்கம் கொள்ளமாட்டார்கள். குளத்திற்கு அருகிலுள்ள பசுமைப்பயிரானது பெறப்படுதற்குரிய நீரை மொத்தமாக பெறாமல் வளரும் இயல்புடையது எனவும் அறியலாம். வேளாண் குறிந்த அறிவியல் கருத்துக்களையும் கூற வள்ளுவரின் ஒரு குறள் போதுமானது, நிலம் பண்படுத்தப்பட்ட பின் என்ன செய்ய வேண்டுமென்பதை,

**"ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்**
**நீரினுள் நன்றதன் காப்பு" (குறள் : 1038 )**

என்ற குறள் மூலம் விளக்கியுள்ளார். உழவன் பின் ஊட்டசத்திற்காக எரு இடுதல், பின் களைஎடுத்தல், நீர்பாய்ச்சல் ஆகியவற்றை வரிசையாக செய்யவேண்டும், பின்பு வளரும் பயிரைப் பாதுகாக்க வேண்டும் என்று ஒரு பண்பட்ட உழவனைப்போல விளக்கமாகக் கூறியுள்ளார். நீரே பயிர்களுக்கு ஆதாரமென நான்மணிக்கடிகையின் பாடல்வரி அறிவிக்கிறது . **"முளைக்குழாம் நீருண்டே லுண்டாம்திருக் குழாம்" (நான்மணி-65)** நீர்வளம் உண்டெனில் நிறத்தில் இட்ட விதையானது குறையாமல் முளைக்கும் என்பதை பழமொழியும் **"அரிந்தரி கால் நீர்ப் படுக்குமாறு" (பழமொழி - 300)** எனவும் சிறுபஞ்ச மூலம் **"நீர் சான்றுயரவே நெல்லுயருஞ் - சீர்சான்ற" (சிறு - 46)** எனவும் விவசாயத்தின் முறைகளை விளக்குகிறது.

**முடிவுரை**

இயற்கையின் கொடையாகிய நீரின் முக்கியத்துவத்தையும் உயிர்களை வளர்க்கும் தாய்மைப் பண்புக் கொண்ட நீரைத் தூய்மையுடன் பாதுகாப்பது நம் இன்றியமையாத கடமையாகும். இதை பழங்கால இலக்கியங்களும் நமக்கு எடுத்தியம்புகின்றன. தமிழர்கள் நீர்நிலைகளை முறைப் படிபாதுகாத்து, பயிர்தொழிலுக்கும், உயிர்வாழ்க்கைக்கும் பயன்படுத்தி முறைப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தமையை அறியமுடிகின்றது. வேளாண்மைக்கும் நீரானது எங்ஙனம் பயன்படுத்தப் பட்டன என்பன போன்ற செய்திகளை நாலடிநானூறு சிறப்புடன் எடுத்துரைக்கின்றது.

**பார்வைநூல்கள்**

[1] இளங்குமரன், இரா. *பதினெண்கீழ்க்கணக்கு, நான்மணிக்கடிகை*, மாணவர் பதிப்பகம், சென்னை , 2009.

[2] கௌமாரீஸ்வரி, எஸ். *நாலடியார்*. சாரதா பதிப்பகம், சென்னை, 2006.

[3] பாக்கிய மேரி. *வகைமை நோக்கில் இலக்கிய வரலாறு*. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை, 2013.

[4] மாணிக்கவாசகன்,ஞா. *பழமொழி நானூறு*. உமாபதிப்பகம், சென்னை, 2013.

[5] வரதராசனார், மு. *திருக்குறள் மூலமும் உரையும்*. தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, 1993.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.